# பொருளடக்கம்


**நவகிரகம் என்றால் என்ன?**

**நவகிரகம் இருக்கும் இடமும், அதன் பலன்களும்**

**சூரியன் தரும் பலன்கள்**

**சந்திரன் தரும் பலன்கள்**

**செவ்வாய் தரும் பலன்கள்**

**புதன் தரும் பலன்கள்**

**குரு தரும் பலன்கள்**

**சுக்கிரன் தரும் பலன்கள்**

**சனி தரும் பலன்கள்**

**ராகு தரும் பலன்கள்**

**கேது தரும் பலன்கள்**

# நவகிரகம்

- நவகிரகங்கள்தான் ஒரு மனிதனின் வாழ்வை தீர்மானிக்கிறது. இந்த நவகிரகங்களின் அமைப்பால் அவர்களுக்கு நன்மைகள் மற்றும் தீமைகள் நடக்கின்றன. ஒருவர் முற்பிறவியில் செய்த நற்செயல்கள் இப்பிறவியில் நன்மைகளாகவும், முற்பிறவியில் செய்த தீமைகள் இப்பிறவியில் தோஷங்களாகவும் ஜாதகத்தில் வந்தடையும்.

- நவகிரகங்கள் தோன்றிய காலத்திலேயே நவதானியங்களும் தோன்றிவிட்டன. நாம் நவதானியங்களைக் கொண்டுதான் நவகிரகங்களை சாந்தப்படுத்துகிறோம். மேலும், நமது உடலும் நவகிரகங்களால்தான் ஆளப்படுகின்றன. ஒவ்வொரு கிரகமும் ஒவ்வொரு பகுதியில் தங்களது சேவையைச் செய்கின்றன.

- நமது வாழ்க்கைப்பாதை நன்கு அமையவும், நம்மை நல்ல முறையில் வழி நடத்திச் செல்லவும் நவகிரக நாயகர்கள் உதவுகின்றனர்.

## கிரகங்கள் என்பவை யாவை?

- படைத்தல், காத்தல், அழித்தல் என பரம்பொருள் இருக்க, நவகிரகங்களுக்கு அவசியம் என்ன? மனித சரீரம் என்ற தேசத்திற்கு சகலோக நாயகரான பரம்பொருளே தலைவர் எனினும், அந்தச் சரீரத்திலுள்ள ஒவ்வொரு பாகத்திற்கும் ஒவ்வொரு கிரகத்தை அவர் அதிகாரியாக நியமித்து இருக்கிறார்.

- அவ்வாறு அதிகாரியாக நியமிக்கப்பட்டிருக்கும் கிரகங்கள் அந்தந்த மனிதன் முன் ஜென்மங்களில் செய்த வினையை வைத்து அதற்கு தகுந்த பலன்களைத் தத்தம் தசாபுத்திகள் நடக்கும்போது கொடுத்து வருகின்றனர்.

- சூரியன் → தந்தை (ஆத்மா, எலும்பு).

- சந்திரன் → தாய் (மனம், இரத்தம்).

- செவ்வாய் மற்றும் ராகு → சகோதரர்கள் (பலம், மஜ்ஜை).

- புதன் → தாய்மாமன் (வாக்கு, தோல்).
- குரு → புத்திரக்காரன் (ஞானம், தசை, மாமிசம்).
- சுக்கிரன் → களத்திரக்காரகன் (காமம், இந்திரியம்).
- சனி, கேது → ஆயுள் (துக்கம், நரம்புத் தசை).
- ஒரு மனிதன் முன் ஜென்மத்தில் புண்ணியம் செய்தவனா, அவன் எலும்பு பலம் உள்ளதா, தந்தை எப்படிப்பட்டவர், அவர் ஆயுள் எப்படி? என்பன போன்ற நுட்பங்களை எல்லாம் அவனுடைய சூரியன் இருக்கும் நிலையை அறிந்து சொல்ல முடியும். அதாவது கிரகங்கள் எல்லாம் நம் உடலில் குடி கொண்டிருக்கின்றன என்பதே உண்மையாகும்.

## நவகிரகங்களின் குணங்கள் :

- உலகம் இயங்க காரணமாக இருப்பது ஒன்பது கிரகங்களாகும். ஒன்பது கிரகங்களும் தனக்கென குணங்களும் கொண்டுள்ளது.

### சூரியன் :

- சூரியன், ஆத்ம காரகன் என்று அழைக்கப்படுகிறார். சூரியனை வைத்தே தகப்பனார், அரசாங்க பதவி, தந்தையின் உடன் பிறந்தவர்களின் விபரங்கள் ஜாதகத்தில் முடிவு செய்யப்படுகிறது.

### சந்திரன் :

- இவரே உடலுக்கு காரகன். சந்திரன் ஜோதிடத்தில் மனதுக்கு காரகன் என்று அழைக்கப்படுகிறார். சந்திரனுக்கு வளர்பிறை மற்றும் தேய்பிறை என இரட்டை தன்மை உடையதால் அதற்கு ஏற்ப பலன்களும் மாறுபடும்.

## செவ்வாய் :

- செவ்வாய் போர்குணம் கொண்ட ஒரு கிரகம். ரத்தத்திற்கு காரகன் செவ்வாய். உடல் உறுதி, மன உறுதி தருபவர் செவ்வாய். ஜோதிட சாஸ்திரத்தில் செவ்வாய் சகோதர காரகன் என அழைக்கப்படுகிறார்.

## புதன் :

- புதன், வித்யா காரகன் என்று அழைக்கப்படுபவர் புதன். கல்வி, மாமன், அத்தை, மைத்துனர்கள் தொடர்பில் புதனை கொண்டே கணிக்கப்படுகிறது.

## குரு :

- குரு பகவான் புத்திரகாரகன் என்று அழைக்கப்படுகிறார். தன காரகன் என்றும் அழைக்கப்படுகிறார். எல்லா கிரகத்தின் தோஷத்தையும் நீக்கக்கூடியவர் குரு.

## சுக்கிரன் :

- சுக்கிரன் களத்திர காரகன் என்று அழைக்கப்படுகிறார். அறுபத்தி நான்கு கலைகளுக்கும் அதிபதி சுக்கிரன். சுக போகத்திற்கு அதிபதி சுக்கிரனே.

## சனி :

- சனி, ஆயுள்காரகன் என்று அழைக்கப்படுகிறார். வாழ்க்கையில் ஏற்படும் கடுமையான துன்பத்திற்கு காரணம் இவரே. அதேபோல் அளவற்ற செல்வ வளத்தையும் அளிப்பவர்.

## ராகு :

- ராகுவுக்கு சொந்த வீடு கிடையாது. சேரும் கிரகத்திற்கு தக்கவாறும் செயல்படுவார். அரசாங்கத்தில் பதவி, புகழ் இவற்றை பெற ராகுவின் அருள் வேண்டும்.

## கேது :

- ஞான காரகன் என்ற புகழைப் பெறுபவர் கேது. மோட்ச காரகனும் இவரே.

## நவகிரகம் இருக்கும் இடமும், அதன் பலன்களும் :

- ராசிக்கட்டத்தில் நவகிரகங்கள் தாம் இருக்கும் இடத்திற்கு ஏற்ப சுப மற்றும் அசுப பலன்களை அளிக்கின்றன. ஒரு சில இடங்களில் நவகிரகங்களுக்கு சாதகமாக இருக்கும் பட்சத்தில் அந்த இடங்களில் இருக்கும் கிரகத்தினால் நற்பலனும், சில இடங்களில் கிரகத்தின் வலிமையும், பலமும் குறைவதினால் அசுப பலன்களையும் அளிக்கின்றார்கள்.

- கிரகங்களின் பலன்களை அறியும் பொழுது நாம் பலவிதமான ஆராய்ச்சிகளுக்கு உட்பட்டு நமது ஜாதகத்தில் நாம் பலன் காண வேண்டும். அப்பொழுதுதான் நாம் எடுத்துச் சொல்லும் பலனானது ஜாதகத்தில் உள்ள கிரக நிலைக்கு ஏற்ப நல்ல நிலைமையில் இருக்கும்.

### லக்னத்தில் சூரியன் இருந்தால் உண்டாகும் பலன்கள்

- நமது முன்னோர்கள் ஆயக்கலைகள் 64 இருப்பதாக கூறியிருக்கின்றனர். இவற்றில் ஜோதிட கலையும் ஒன்றாகும். ஜோதிட சாஸ்திரம் என்பது ஒரு மிக பெரும் கடல் போன்றது.

- இக்கலையை முழுமையாக கற்க ஒரு மனித வாழ்க்கை போதாது. ஆனால் இக்கலையில் நமக்கு பயன்தரும் முக்கிய ஜோதிட விதிகளை சுருக்கமாக நாம் தெரிந்து கொள்ள முடியும்.

- உலகிற்கே ஒளிதருபவராகவும், நவகிரகங்களில் அனைத்திற்கும் முதன்மையாக இருப்பவர் 'சூரிய பகவான்'. ஜோதிடத்தில் ஒரு மனிதனுக்கு அடிப்படை தேவையாகிய, நல்ல வலுவான உடலமைப்பு ஏற்படுவதற்கு காரணமாகிறார் சூரிய பகவான்.

- எந்தவொரு ஜாதகத்திலும் லக்னம் என்பது முதல் இடமாகும். அவ்விடத்தில் இருந்தே நாம் கிரகம் நிற்கும் இடத்தை நிர்ணயிக்க வேண்டும்.

## லக்னத்தில் சூரியன் இருந்தால் என்ன பலன்?

- ✓ உடல் வலிமை உடையவர்கள்.
- ✓ நோய் எதிர்ப்பு சக்தி அதிகம் கொண்டவர்கள்.
- ✓ பிழை இழைத்தவர்களை மன்னிக்கும் தன்மை குறைவு.
- ✓ சுபக்காரியங்களை முன்னின்று நடத்தக்கூடியவர்கள்.
- ✓ மனோதைரியம் அதிகம் கொண்டவர்கள்.
- ✓ உயர்பதவிகளை வகிக்கக்கூடியவர்கள்.
- ✓ உஷ்ணமான தேகத்தை கொண்டவர்கள்.
- ✓ எதிலும் சுறுசுறுப்பாக செயல்படக்கூடியவர்கள்.
- ✓ பிடிவாத குணம் கொண்டவர்கள்.
- ✓ மற்றவர்களை கவரும் கம்பீரமான நடையும், தோற்றமும் உடையவர்கள்.
- ✓ எதிர்ப்புகளை கண்டு பயம் கொள்ளாதவர்கள்.
- ✓ நிர்வாகத் திறமை உடையவர்கள்.
- ✓ புகழ்ச்சிக்கு மயங்கக்கூடியவர்கள்.
- ✓ எதிலும் முழு கவனத்துடன் செயல்படக்கூடியவர்கள்.
- ✓ கோபம் கொள்ளும் தன்மை உடையவர்கள்.